பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**22 11 2025 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** இந்தியா — பிரிட்டன் இடையேயான உறவுகள் மேலும் வலுவடைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** நடப்பு நிதியாண்டு ரயில்வே **102** கோடி டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

**3)** தேசிய மாணவர் படையினரின் எண்ணிக்கையை **20** லட்சமாக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் தெரிவித்துள்ளார்.

**4)** தெலங்கானாவில் **25** பெண்கள் உட்பட **37** மாவோயிஸ்டுகள் இன்று சரணடைந்தனர்.

**5)** புவனேஷ்வரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் பிரஜ்வால் தேவ் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

இந்தியா — பிரிட்டன் இடையேயான உறவுகள் மேலும் வலுவடைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்கில் நடைபெற்றுவரும் ஜி-20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, பிரிட்டன் பிரதமர் திரு Keir Starmer-ஐ சந்தித்து பேசியபின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டு ரயில்வே 102 கோடி டன் சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளது.

இதுதொடர்பாக, ரயில்வே இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 50 கோடி டன் நிலக்கரி, 11 கோடி டன் இரும்புத்தாது, 9 கோடி டன் சிமெண்ட் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் 44 லட்சம் டன் சரக்குகளை ரயில்வே கையாண்டுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தேசிய மாணவர் படையினரின் எண்ணிக்கையை 20 லட்சமாக அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று **78-**ஆவது தேசிய மாணவர் படை தினத்தையொட்டி, போர் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தியபின் பேசிய அவர், இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தேசிய மாணவர் படை தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜென்ரல்**Virendra Vats,** தற்போது நாட்டின் **700** மாவட்டங்களில் தேசிய மாணவர் படையினர் இருப்பதாக கூறினார்.

இதில், **40** சதவீதம் பேர் மாணவிகள் என்று கூறிய அவர், நாட்டில் **90** சதவீத மாவட்டங்களில் தேசிய மாணவர் படையினர் உள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>>

உலகளாவிய திரைப்பட தயாரிப்பில் இந்தியாவை முன்னணி நாடாக மாற்றுவது என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப செயல்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கோவாவில் நடைபெற்றுவரும் சர்வதேச திரைப்பட விழாவில்

இணை தயாரிப்பு குறித்த கூட்டத்தில் தாம் உரையாற்றியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒலி-ஒளி துறையில் இணை தயாரிப்புக்கு மிகப்பெரிய பங்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு, திரைப்பட தயாரிப்பு வசதிகள் உள்ளிட்டவை சர்வதேச அளவில் இத்துறையில் ஒருங்கிணைந்து செயல்பட வழிவகை செய்துள்ளதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<>>>>>>

தெலங்கானாவில் 37 மாவோயிஸ்டுகள் இன்று காவல்துறையினர் முன் சரணடைந்தனர்.

தலைநகர் ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில காவல்துறை தலைவர் திரு ஷிவாஹர் ரெட்டி, 25 பெண்கள் உட்பட 37 பேர் ஆயுதங்களுடன் சரணடைந்ததாக தெரிவித்தார்.

Koyyada Sambaiah, Appasi Nariyana, Somada உள்ளிட்ட முக்கிய மாவோயிஸ்ட் தலைவர்கள் சரணடைந்தவர்களில் அடங்குவதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>

ஹஜ் புனித யாத்ரீகர்களின் நிலுவைத் தொகையில் 75 சதவீத்தை உடனடியாக திருப்பி செலுத்த மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஹஜ் புனித யாத்ரிரை தொடர்பாக மும்பையில் இன்று நடைபெற்ற கூட்டத்தில், மத்திய சிறுபான்மையினர் விவகாரத்துறை செயலர் டாக்டர் சந்திரசேகர் குமார், ஹஜ் குழுவிடம் இதனை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

மீதமுள்ள 25 சதவீத தொகை ஆய்வுக்கு பிறகு வழங்கவும் அவர் தெரிவித்தார்.

ஹஜ் புனித பயணம் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் டிஜிட்டல் மயமாக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

நாட்டில் உணவு தானிய உற்பத்தி 35 கோடியே 70 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தலைமை இயக்குனர் டாக்டர் எம் எல் Jat தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயிர் கழிவுகளை எரிப்பது 95 சதவீதம் குறைந்துள்ளதாக தெரிவித்தார்.

இதற்காக விவசாயிகளையும், வேளாண் விஞ்ஞானிகளையும், அரசு நிர்வாகத்தையும் டாக்டர் எம் எல் Jat பாராட்டினார்.

<<<<<>>>>>>

தொழிலாளர் நலனுக்கான மத்திய அரசின் நான்கு சட்டங்கள் சமூக பாதுகாப்பை உறுதி செய்கிறது.

இந்த புதிய சட்டம் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பல்வேறு சிறப்பு அம்சங்களை கொண்டுள்ளதாக தமிழகத்தின் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

*(Voice Byte — பொதுமக்கள் — 60 Sec. )*

<<<<<>>>>>>

தமிழகம் — காசி இடையேயான கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் வகையில் உத்தரப்பிரதேச மாநிலம் காசியில், மத்திய கல்வி அமைச்சகம் அடுத்த மாதம் 2-ஆம் தேதிமுதல் காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியை நடத்த உள்ளது.

ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற அடிப்படையில் சென்னை ஐ ஐ டி - காசி பனாரஸ் இந்து பல்கலைக்கழகமும் இணைந்து இதை நடத்தஉள்ளது.

தமிழ் கற்கலாம் என்ற கருப்பொருளுடன் நடத்த உள்ள காசி தமிழ் சங்கமத்தில், தமிழகத்திலிருந்து ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள உள்ளனர்.

காசியில் உள்ள மகாகவி சுப்பிரமணி பாரதியாரின் பூர்வீக இல்லம், காசி விஸ்வநாதர் திருக்கோவில், மாதா அன்னபூர்ணா திருக்கோவில், கேதார்காட் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு இந்த பிரதிநிதிகள் செல்ல உள்ளனர்.

<<<<<>>>>>>

பாகிஸ்தானை சேர்ந்த பத்திரிகையாளர் **Alifia Sohail** மற்றும் மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் **Farwa Askar**-ஐ அந்நாட்டு அரசு கைது செய்த நடவடிக்கையை மனித உரிமை கவுன்சில் கண்டித்துள்ளது.

பாகிஸ்தான் அரசு கொண்டுவந்த **27**-ஆவது அரசியல் சாசன திருத்த சட்டத்தை கண்டித்து, கராச்சி பத்திரிகையாளர் சங்க அலுவலகத்திற்கு முன்பு, போராட்டம் நடத்தியதற்காக இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சட்டத்திருத்தத்தின் அடிப்படையில், ராணுவத்திற்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்பட்டு உச்சநீதிமன்றத்திற்கும் மேலான புதிய அரசியல் சாசன நீதிமன்றம் அமைப்பதற்கு வழிவகை செய்துள்ளது.

<<<<<>>>>>>

வியட்நாமில் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை **55**-ஆக அதிகரித்துள்ளது.

மழை வெள்ளத்தால் மேலும் 13 பேர் காணாமல் போனதாக வியட்நாம் பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் 80 ஆயிரம் ஹெக்டேர் நெல் பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும், 28 ஆயிரத்து 400 வீடுகள் வெள்ளதால் சூழப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மழை வெள்ளத்தால் 36 கோடி டாலர் அளவுக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நைஜீரியாவில் பிணைக் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டுள்ள 200 பள்ளிக் குழந்தைகளை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

Agware பகுதியில் உள்ள பள்ளியில் துப்பாக்கிகளுடன் நுழைந்தவர்கள் தாக்குதல் நடத்தி, பள்ளிக் குழந்தைகளை சிறைபிடித்துள்ளதாக அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

அப்பகுதியை பாதுகாப்புப் படையினர் சுற்றி வளைத்துள்ளதாகவும், குழந்தைகளை பாதுகாப்பாக மீட்க தேவையான

அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

புவனேஷ்வரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் பிரஜ்வால் தேவ் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **7-6, 6-0** என்ற செட் கணக்கில், **Manish Suresh Kumar**-ஐ வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில், **Dig Vijay Pratap Singh**-கும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

---------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்சில் **6** விக்கெட் இழப்பிற்கு **247** ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்க முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-----------------

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றுப்போட்டியில் இந்தியா இன்று பாலஸ்தீனத்தை எதிர்கொள்கிறது.

அகமதாபதில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

**<<<<<END>>>>>>>**